Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 122 | உள்ளூர் - 02.05.2026 | சனி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 122 | வெளியூர் - 03.05.2026 | ஞாயிறு | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


டி.எம்.பி. வங்கியில் காலியிடங்கள்! | பிள்ளைகளின் எதிர்காலம் சீராக பரிகாரங்கள்! | NPS கட்டணங்களில் முக்கிய மாற்றங்கள்:? | இந்தியாவில் குடியுரிமை விதிகள் 2026 மாற்றம்!

## எனக்கு திருப்தியில்லை.. ஈரான் போர் நிறுத்த முன்மொழிவு குறித்து டிரம்ப்!

அமெரிக்கா, மே. 02–

ஈரான் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் குறித்து பேசிய டிரம்ப், "அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புகிறார்கள், ஆனால் தற்போதைய முன்மொழிவுகளில் எனக்கு திருப்தியில்லை. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்" என்று தெரிவித்தார்.

மேலும், "தலைவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போவதில்லை, அங்கே யார் தலைவர் என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. ஈரானிடம் இப்போது கடற்படை இல்லை, விமானப்படை இல்லை, பாதுகாப்புத் திறனும் மிகக் குறைவாகவே உள்ளது.

மனித நேய அடிப்படையில், அவர்களை அழிப்பதைப் காட்டிலும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதையே நான் விரும்புகிறேன்.

இருப்பினும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ராணுவ நடவடிக்கை ஒரு வாய்ப்பாகத் தொடரும்.

ராணுவ நடவடிக்கைகளுக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை, அது அரசியலமைப்புக்கு எதிரானது" என்றும் தெரிவித்தார்.

## 'எல்.பி.ஜி. விலை உயர்வை மத்திய அரசு திரும்பப் பெறவேண்டும்' - முதலமைச்சர் ஸ்டாலின்!

சென்னை, மே. 02–

வணிக சிலிண்டருக்கான விலை உயர்வை மத்திய அரசு திரும்பப் பெறவேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளப் பதிவில், "மக்களின் துயரை எண்ணிப் பார்த்து தீர்வு காணுங்கள்.



தேர்தலுக்கு முன்பே கணித்தது போல், தேர்தல் முடிந்தவுடன் எல்.பி.ஜி. விலையை உயர்த்தியிருக்கி றது ஒன்றிய பா.ஜ.க. அரசு. உலகச்சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோது, அதன் பலனை மக்களுக்கு அளிக்கவில்லை. இப்போது மேற்காசியப்போர் என்ற நெருக்கடியை வைத்து, மக்களின் நலனை எண்ணாமல், விலையை ஏற்றுவது சரியல்ல.

இந்த எல்பிஜி விலை உயர்வு ஏற்படுத்தும் தாக்கங்களை உணர்ந்து, இந்த விலை உயர்வை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மக்களின் வாழ்வாதாரத்தைக் காக்க வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஈரானில் குண்டு வெடிப்பு; பாதுகாப்புப்படை வீரர்கள் 14 பேர் பலி!

தெஹ்ரான், மே. 02–

ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பலர் உயிரிழந்தனர்.



இந்த போர் கடந்த மாதம் 7ம் தேதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, போரின்போது ஈரான் மீது வீசப்பட்ட வெடிகுண்டுகள் சில வெடிக்காமல் உள்ளன. அவற்றை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈரான் பாதுகாப்புப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஈரானின் ஷான்சஜ் நகரில் நேற்று குண்டு வெடித்தது. ஈரான் புரட்சிகர காவல்ப்படை தளம் அருகே இந்த குண்டு வெடிப்பு நடந்துள்ளது.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாதுகாப்புப்படை வீரர்கள் 14 பேர் உயிரிழந்தனர். போரில் ஈரான் மீது அமெரிக்கா வீசிய குண்டு தற்போது வெடித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

## எரிபொருள் விலை கடுமையாக உயர்வு: ஏர் இந்தியா எடுத்த முடிவு!

புதுடெல்லி, மே. 02–

அமெரிக்கா – இஸ்ரேல் – ஈரான் இடையே நடைபெற்ற போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் இழுபறியாகவே தொடர்ந்து வருகிறது. உலகின் 20 சதவிகிதம் கச்சா எண்ணெய் வர்த்தகம் நடைபெறும் ஹார்முஸ் ஜலசந்தியில், அமெரிக்காவும் ஈரானும் தங்கள் கட்டுப்பாட்டை நிலைநாட்டும் போட்டியில் இருப்பதால் உலகளவில் எண்ணெய் வர்த்தகம்



கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விமான எரிபொருள் விலை அதிகமாகி இருப்பதால் விமான நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. இதனிடையே சர்வதேச விமானங்களுக்கான எரிபொருள் விலையை 5 சதவீதம் உயர்த்தியது மத்திய அரசு.

இந்தநிலையில், சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், ஏர் இந்தியா நிறுவனம் தனது விமான சேவையில் சுமார் 10 சதவீதத்தை குறைக்க முடிவு செய்துள்ளது. இதனால் நாள் ஒன்றுக்கு சுமார் 100 விமானங்கள் ரத்து செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற சர்வதேச இடங்களுக்கான விமான சேவைகள் அதிக அளவில் குறைப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## இனி சுங்கச்சாவடியில் வாகனங்கள் நிற்க தேவையில்லை - இந்தியாவில் புதிய நடைமுறை அறிமுகம்!

சென்னை, மே. 02–

வாகனங்கள் வேகமாக கடக்கும் போதே சுங்கக்கட்டணம் வசூலிக்கும் முறை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சுங்கச்சாவடிகளில் 100% Fastag**

இந்தியாவில் தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் வாகனங்களில், சுங்கச்சாவடி மூலம் சுங்க கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இதில், ரொக்கப்பரிவர்த்தனையில் நேர விரயம் ஏற்பட்டு, வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து, Fastag முறை அனைத்து சுங்கச்சாவடிகளிலும் அமுல்படுத்தப்பட்டு காத்திருக்கும் நேரம் 3 நிமிடங்களில் இருந்து 60 வினாடிகளாக குறைக்கப்பட்டது.

இன்று முதல் நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் ரொக்க பரிமாற்றத்தை நிறுத்தியுள்ள அரசு, 100% Fastag முறை நடைமுறைப்




படுத்தப்படுவதாக அறிவித்துள்ளது.

**வாகனங்களை நிறுத்தாமலே சுங்கக்கட்டணம்**

அதேவேளையில், வாகனங்களை சிறிது நேரம் கூட நிறுத்தாமல், வேகமாக கடக்கும் போதே கட்டணம் வசூலிக்கும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதில், AI மற்றும் அதிவேக கேமராக்கள் உதவியுடன் வாகனம் அடையாளம் காணப்படும். தானியங்கி வாகனப் பதிவு எண் கண்டறிதல் (ANPR) தொழில்நுட்பத்தை, RFID அடிப்படையிலான FASTag தொழில்நுட்பத்துடன் இணைத்து, வாகன அடையாளத்தின் அடிப்படையில் சுங்கக் கட்டணங்கள் தானாகவே கழிக்கப்படும்.

இந்தியாவில் முதல்முறையாக குஜராத்தின் சூரத் நகரில் உள்ள சோரியாசியில் உள்ள சுங்கச்சாவடியில் இந்த முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மும்பை–டெல்லி நெடுஞ்சாலையில் (NH48), சூரத் மற்றும் பரூச் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. பிப்ரவரி முதல் சோதனை ஓட்டம் நடைபெற்று வந்த நிலையில், தற்போது பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இந்தியாவில் உள்ள 1,050 க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளை, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தடையற்ற சுங்கக் கட்டண வசூல் முறைக்கு மாற்ற உள்ளதாக நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

## அடுத்த கட்டத்திற்கு நகரும் ஈரான் போர்

# இஸ்ரேலுக்கு 6,500 டன் ஆயுதங்கள்.. ஈரானுக்கு எதிரான டிரம்பின் ரகசியப் போர் திட்டம்..!

## கையாள போகும் உத்திகள்!!






ஈரான், மே.02–

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் மீது மீண்டும் போரின் மேகங்கள் சூழ்ந்துள்ளன. ஈரானுடனான தற்போதைய பதற்றங்களை உச்சகட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மிகவும் முக்கியமான மற்றும் தீவிரமான இராணுவ நடவடிக்கைக்குத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

'Axios' வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி, வியாழக்கிழமையன்று, அமெரிக்க மத்திய கட்டளையகத்தின் (CENTCOM) மூத்த அதிகாரிகள் வெள்ளை மாளிகையில் டிரம்பைச் சந்தித்து, ஈரானின் மீதான தாக்குதல்களுக்கான சமீபத்திய உத்திகளை விளக்கினர். சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த ரகசியக் கூட்டத்தில், மத்திய கட்டளையகத் தளபதி பிராட் கூப்பர் மற்றும் கூட்டுப் படைத் தளபதிகளின் குழுத் தலைவி ஆகியோர் அதிபர் டிரம்பிடம் எதிர்காலச் செயல் திட்டங்களை முன்வைத்தனர்.

ஈரானுடனான பேச்சுவார்த்தைகள் தேக்கமடைந்த நிலையிலும், போர் நிறுத்த முயற்சிகள் முடங்கிய நிலையிலும், அமெரிக்கா தற்போது தனது இராணுவ வல்லமையை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்குச் சான்றாக, வெறும் 24 மணி நேரத்திற்குள், அமெரிக்க அரசாங்கம் இஸ்ரேலுக்கு 6,500 டன் எடையுள்ள கனரக ஆயுதங்களையும், அதிநவீன இராணுவ உபகரணங்களையும் வழங்கியுள்ளது. 'ஜெருசலேம் போஸ்ட்' (Jerusalem Post) செய்தி வெளியிட்ட தகவலின்படி, இஸ்ரேல் ஈரானின் மீது நடத்தக்கூடிய சாத்தியமான தாக்குதலுக்கான தயாரிப்புகளின் ஒரு பகுதியாகவே இந்த பிரம்மாண்டமான விநியோகம் அமைந்திருப்பதாகத் தெரிகிறது.

இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சகம் இந்த பிரம்மாண்டமான தளவாட விநியோக நடவடிக்கையை ஒருங்கிணைத்துள்ளது. இரண்டு பெரிய சரக்குக் கப்பல்கள் மற்றும் பல போர் விமானங்கள் மூலம் வந்து சேர்ந்த இந்தத் தளவாடங்களில், ஆயிரக் கணக்கான வான்வழி குண்டுகள், தரை–வான் ஏவுகணைகள், இராணுவ லாரிகள் மற்றும் அதிநவீன 'கூட்டு இலகுரக தந்திரோபாய வாகனங்கள்' (JLTVs) ஆகியவை அடங்கும். இந்த உபகரணங்களைச் சுமந்து வந்த கப்பல்கள் ஏற்கனவே ஆஷ்டாட் (Ashdod) மற்றும் ஹைஃபா (Haifa) துறைமுகங்களை வந்தடைந்துவிட்டன. பாதுகாப்புத் கொள்முதல் இயக்குநரகத்தின் மேற்பார்வையில், இந்த உபகரணங்கள் நூற்றுக்கணக்கான லாரிகள் மூலம் நாடு முழுவதும் உள்ள பல்வேறு இராணுவத் தளங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

எதிரியின் மீது எந்த நேரத்திலும் மின்னல் வேகத் தாக்குதல்களைத் தொடுக்கத் தனது இராணுவம் தயாராக இருப்பதாக இஸ்ரேலியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் தெரிவித்தார். பாதுகாப்பு அமைச்சகத்தின் தகவல்படி, 'ஆபரேஷன் ரோரிங் லயன்' (Operation Roaring Lion) எனப்படும் நடவடிக்கை தொடங்கியதிலிருந்து, மொத்தம் 403 விமானங்கள் மற்றும் 10 கடல்வழிச் சரக்குக் கப்பல்கள் மூலம் 1,15,600 டன்னுக்கும் அதிகமான இராணுவ உபகரணங்கள் இஸ்ரேலை வந்தடைந் துள்ளன. வரும் வாரங்களில் இந்த விநியோகத்தின் வேகம் மேலும் அதிகரிக்கும் என்று மூத்த அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஈரானைக் கையாள்வதற்காக, மத்திய கட்டளையகம் அதிபர் டிரம்பிடம் ஒரு மூன்று முனை உத்தியை முன்வைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**முதலாவது உத்தி:**

ஈரானில் உள்ள முக்கிய உள்கட்டமைப்பு இலக்குகள் மீது தொடர்ச்சியான "சிறிய மற்றும் சக்திவாய்ந்த" தாக்குதல்களைத் தொடுப்பதாகும்.

**இரண்டாவது உத்தி:**

உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்திற்கு மிக முக்கியமானதாகத் திகழும் 'ஹோர்முஸ் நீரிணையின்' (Strait of Hormuz) முழுமையான கட்டுப்பாட்டைத் தன்வசப்படுத்தி, சர்வதேசக் கப்பல் போக்குவரத்திற்குப் பாதுகாப்பை உறுதி செய்வதாகும்.

**மூன்றாவது,**

ஈரானின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்புகளை அழிக்க அல்லது கைப்பற்றுவதற்காக சிறப்புப் படைகளைக் கொண்டு ஒரு இரகசிய நடவடிக்கையைத் தொடங்குவதாகும்.

இருப்பினும், இராணுவ நடவடிக்கை மூலம் மட்டுமல்ல, பொருளாதாரத் தடைகள் மூலமாகவும் ஈரானை அடக்க முடியும் என்று டிரம்ப் நம்புகிறார். குண்டுவீச்சுகளை விட பொருளாதாரத் தடைகளும் முற்றுகைகளும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர் ஒரு நேர்காணலில் கூறினார். தனது அணுசக்தித் திட்டம் குறித்து அமெரிக்கா எழுப்பிய கவலைகளுக்கு தெஹ்ரான் தீர்வு காணாவிட்டால், இந்த பொருளாதார அழுத்தம் தீவிரமடையும் என்று அவர் எச்சரித்தார்.

மறுபுறம், ஈரானிய ஜனாதிபதி மசூத் பெஷ்மெர்கா அமெரிக்காவின் நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்தார். முந்தைய பேச்சுவார்த்தைகளின் போது அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்கள் நாட்டை இரண்டு முறை தாக்கியதால், வாஷிங்டன் மீதான நம்பிக்கையை அவர்கள் முற்றிலும் இழந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார். அமெரிக்கா மீண்டும் தாக்கக்கூடும் என்று தாங்கள் நம்புவதாகவும், அந்த வல்லரசு தனது பொறுப்பற்ற தன்மையால் அவநம்பிக்கையை அதிகரித்து வருவதாகவும் அவர் எச்சரித்தார். சுருக்கமாக, அமெரிக்கா தயாரித்த போர் திட்டங்கள் மற்றும் ஈரானின் எச்சரிக்கைகள் ஆகிய இரண்டின் காரணமாகவும் மத்திய கிழக்கு மற்றொரு பெரிய போரின் விளிம்பில் நின்றது.

## தொடர் விடுமுறையால் திருப்பதி கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு!

திருப்பதி, மே. 02–

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று காலை முதல் பக்தர்களின் கூட்டம் படிப்படியாக அதிகரித்து வந்தது. கோடை விடுமுறை மற்றும் தொடர் விடுமுறை காரணமாக பக்தர்கள் அதிக அளவில் தரிசனத்திற்கு வர தொடங்கினர்.



வாக்கு பதிவு முடிவடைந்ததால் தமிழகத்தில் இருந்து வரும் பக்தர்களின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து உள்ளது. இதனால் வைகுந்தம் தங்கும் அறைகள், நாராயணகிரி கொட்டகைகள் முழுவதும் பக்தர்கள் நிரம்பி வழிகின்றனர். படகங்கம்மா கோவில் வரை பக்தர்கள் தரிசனத்திற்கு நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

கோடைக்காலத்தில் பக்தர்கள் அதிக அளவில் தரிசனத்திற்கு வருவதால் வருகிற 6–ந்தேதி நடைபெற உள்ள அறங்காவலர் குழு கூட்டத்தில் வி.ஐ.பி. பிரேக் தரிசனம், ரூ.300 சிறப்பு தரிசனம் மற்றும் நேரம் ஒதுக்கீட்டு தரிசனங்களை ரத்து செய்வது குறித்து விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருப்பதியில் நேற்று 71,008 பேர் தரிசனம் செய்தனர். 36,144 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ.3.52 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 24 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.



தலையங்கம்
மதுரை மணி
சனிக்கிழமை 02.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 19-ம் தேதி

# இந்தியாவில் பாலின விகிதம் மேம்பாடு..!



இந்தியாவில் பாலின சமநிலையை நோக்கி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கை குறிப்பிடுகிறது. குறிப்பாக, பெண் குழந்தைகளின் உயிர்வாழ்வு விகிதம் உயர்ந்துள்ளதே இந்த மாற்றத்திற்கான முக்கிய அடையாளமாக பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கையை புள்ளிவிவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) தயாரித்துள்ளது. பல்வேறு அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அரசு அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த வெளியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படி, 201719 காலகட்டத்தில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 904 பெண் குழந்தைகள் இருந்த நிலையில், 202123 காலகட்டத்தில் இந்த எண்ணிக்கை 917 ஆக உயர்ந்துள்ளது. இது பெண் குழந்தைகளின் உயிர்வாழ்வு விகிதம் மேம்பட்டுள்ளதாகவும், குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகள் வலுப்பெற்றுள்ளதாகவும் காட்டுகிறது.

மேலும், 2008 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் ஆண் மற்றும் பெண் சிசுக்களின் மரண விகிதம் தொடர்ந்து குறைந்து வந்துள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. இது இந்தியாவில் சுகாதார துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் முக்கிய குறிகாட்டியாக கருதப்படுகிறது.

கல்வித்துறையிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். 202122ல் பெண்களின் உயர்கல்வி சேர்க்கை விகிதம் 28.5 இருந்த நிலையில், 202223ல் அது 30.2 ஆக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில், ஆண்களின் சேர்க்கை விகிதம் 28.3 இருந்து 28.9 ஆக உயர்ந்துள்ளது. இதனால், கல்வியில் பெண்கள் வேகமாக முன்னேறி வருவது தெளிவாகிறது.

வேலைவாய்ப்பிலும் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது. 2022 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், 15 வயதுக்கு மேற்பட்டோரின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் இரு பாலினரிலும் உயர்ந்துள்ளது. குறிப்பாக, கிராமப்புற பெண்களின் பங்கேற்பு 37.5 சதவீதத்திலிருந்து 45.9 சதவீதமாக உயர்ந்து, கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

மேலாண்மை நிலைகளிலும் பெண்கள் முன்னேற்றம் கண்டுள்ளனர். 2017 முதல் 2025 வரை மேலாண்மை பதவிகளில் ஈடுபட்ட ஆண்களின் எண்ணிக்கை 73.80 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், பெண்களின் எண்ணிக்கை 102.54 சதவீதம் அதிகரித்துள்ளது. இது நிர்வாக மற்றும் முடிவெடுக்கும் நிலைகளில் பெண்களின் பங்கு வலுவடைந்துவருவதை காட்டுகிறது.

இந்த வெளியீடு மக்கள்தொகை, கல்வி, சுகாதாரம், பொருளாதார பங்கேற்பு, முடிவெடுத்தல், பெண்களுக்கு எதிரான வன்முறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பாலின அடிப்படையிலான தரவுகளை தொகுத்து வழங்குகிறது. மேலும், 50 முக்கிய குறிகாட்டிகளுக்கான வரையறைகள், மூலங்கள் மற்றும் விளக்கங்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், இந்த அறிக்கை இந்தியாவில் பாலின சமநி லைக்கு நோக்கி நிலையான முன்னேற்றம் ஏற்பட்டு வருவதை வெளிப்படுத்துகிறது. பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நிலை உயர்வுடன், சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் பாதையில் நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது.

# NPS கட்டணங்களில் முக்கிய மாற்றங்கள்: AMC, PRAN.... PFRDA அளித்த மிகப்பெரிய நிவாரணம்!




புதுடெல்லி, மே. 02–

NPS சந்தாதாரர்களுக்கு ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) ஒரு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

தேசிய ஓய்வூதிய அமைப்பு (NPS) மற்றும் அது சார்ந்த திட்டங்களின் கீழ் சந்தாதாரர்களுக்குக் கட்டணங்கள் எவ்வாறு விதிக்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் இந்த சுற்றறிக்கை அமைந்துள்ளது. இந்தப் புதிய தெளிவுரைகள் ஜூலை 1, 2026 முதல் நடைமுறைக்கு வரும்.

மத்தியப் பதிவேட்டு முகமைகள் (CRAs) கட்டணங்களை வசூலிக்கும் முறையில் அதிக தெளிவையும் ஒருமைப்பாட்டையும் கொண்டு வருவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

**Tier I மற்றும் Tier II கணக்குகளுக்கான AMC: என்ன மாற்றங்கள்?**

Tier I மற்றும் Tier II கணக்குகளுக்கான AMC –இல் என்ன மாற்றங்கள் ஏற்படும்? முக்கியமான தெளிவுரைகளில் ஒன்று, வருடாந்திர பராமரிப்புக் கட்டணங்கள் (AMC) தொடர்பானது. ஒரே துறையின் (அரசு அல்லது தனியார்) கீழ் வரும் Tier I கணக்குகளுக்கு இணையாகவே, Tier II கணக்குகளுக்கான AMC கட்டணங்களும் இனி நிர்ணயிக்கப்படும் என்று PFRDA கூறியுள்ளது. இருப்பினும், சிறு முதலீட்டாளர்களுக்கு இதில் ஒரு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

“ஒரு காலாண்டின் இறுதியில், [Tier II] கணக்கில் உள்ள மொத்த நிதித் தொகை ₹1,000 வரை இருந்தால், அந்தக் கணக்கிற்கு AMC கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது.” என்று சுற்றறிக்கை கூறுகிறது.

இதன் பொருள் என்னவென்றால், உங்கள் Tier II கணக்கின் இருப்புத் தொகை ₹1,000 அல்லது அதற்குக் குறைவாகவே நீடித்தால், உங்களிடமிருந்து AMC கட்டணம் வசூலிக்கப்படாது.

**ஒரே PRAN–இன் கீழ் உள்ள ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனி AMC**

உங்களிடம் ஒரே ஒரு PRAN (நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்) மட்டுமே இருந்தாலும், அதன் கீழ் உள்ள ஒவ்வொரு திட்டமும் ஒரு தனித்தனி கணக்காகவே கருதப்படும் என்பதை இந்தச் சுற்றறிக்கை தெளிவாகக் குறிப்பிடுகிறது.

“ஒரு PRAN–இன் கீழ் பராமரிக்கப்படும் ஒவ்வொரு ஓய்வூதியத் திட்டமும் ஒரு தனித்தனி கணக்காகவே கருதப்படும்... மேலும் அத்தகைய ஒவ்வொரு கணக்கிற்கும் AMC கட்டணம் தனித்தனியாகவே விதிக்கப்படும்.” என்று சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆகையால், ஒரே PRAN–இன் கீழ் நீங்கள் பல திட்டங்களை வைத்திருந்தால், ஒவ்வொரு திட்டத்திற்கும் கட்டணங்கள் தனித்தனியாக விதிக்கப்படலாம்.

**செயலற்ற கணக்குகளுக்குப் பெரும் நிவாரணம்**

செயலற்ற நிலையில் உள்ள சந்தாதாரர்களுக்கு இதில் ஒரு குறிப்பிடத்தக்க சலுகை அளிக்கப்பட்டுள்ளது. உங்கள் கணக்கு ‘செயலற்ற கணக்கு’ (dormant account) நிலையை அடைந்தால் (அதாவது, தொடர்ந்து 4 காலாண்டுகளுக்கு எந்தப் பங்களிப்பும் செய்யப்படாமல் இருந்தால்), உங்களிடமிருந்து வழக்கமான AMC கட்டணத்தில் 10% மட்டுமே வசூலிக்கப்படும்.

“செயலற்ற கணக்குகளைப் பொறுத்த வரை, வழக்கமாகப் பொருந்தக்கூடிய AMC கட்டணத்தில் 10% மட்டுமே வசூலிக்கப்படும்,” என்று அந்தச் சுற்றறிக்கை கூறியுள்ளது.

**‘செயலற்ற கணக்கு’ என்றால் என்ன?**

PFRDA இதைத் தெளிவாக வரையறுத்துள்ளது: “தொடர்ந்து நான்கு காலாண்டுகளுக்கு எந்தவிதமான பங்களிப்பும் பெறப்படாத கணக்கே ‘செயலற்ற கணக்கு’ ஆகும்...”. இத்தகைய கணக்குகள், அடுத்த காலாண்டின் முதல் வாரத்திலேயே ‘செயலற்ற கணக்கு’ எனப் பட்டியலிடப்படும். அந்தக் கணக்கு மீண்டும் செயல்பாட்டுக்கு வரும் வரை, அதற்குக் குறைக்கப்பட்ட கட்டணங்களே பொருந்தும்.

**PRAN தொடக்கக் கட்டணங்கள்: கூடுதல் கணக்குகளுக்குக் கூடுதல் கட்டணம் இல்லை**

PRAN தொடர்பான கட்டணங்கள் குறித்தும் ஒழுங்குமுறை ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது:

– PRAN கணக்கைத் தொடங்குவதற்கான கட்டணம், கணக்கை முதன்முதலில் உருவாக்கும்போது ஒருமுறை மட்டுமே வசூலிக்கப்படும்.

– ஒரே PRAN–இன் கீழ் நீங்கள் கூடுதல் கணக்குகளை (Tier I அல்லது Tier II) திறந்தால் அல்லது செயல்படுத்தினால், கூடுதல் கட்டணம் எதுவும் விதிக்கப்படாது.

– ஏற்கனவே உள்ள ஒரு PRAN–க்குள் ஒவ்வொரு கணக்கையும் செயல்படுத்துவதற்கும்/திறப்பதற்கும், கட்டணம் பூஜ்ஜியமாகும்.

**சில திட்டங்களுக்கு பூஜ்ஜிய AMC**

**PFRDA சில குறைந்த இருப்பு கணக்குகளுக்கும் நிவாரணம் வழங்கியுள்ளது:**

அடல் பென்ஷன் யோஜனா (APY) மற்றும் NPS–Lite திட்டங்களின் கீழ் உள்ள பூஜ்ஜிய இருப்பு கணக்குகளுக்கு AMC வசூலிக்கப்படாது.

**கட்டணங்கள் எவ்வாறு, எப்போது வசூலிக்கப்படும்?**

– ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் கட்டணங்கள் வசூலிக்கப்படும் என்று சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

– நிறுவனத்திற்கு பில் அனுப்பப்படும் (செலவை அவர்கள் ஏற்றால்), அல்லது சந்தாதாரரின் கணக்கிலிருந்து நேரடியாகப் பிடித்தம் செய்யப்படும்.

– பொருந்தக்கூடிய கட்டணங்கள், ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், அல்லது சந்தாதாரரின் கணக்கிலிருந்து யூனிட் பிடித்தம் மூலம் வசூலிக்கப்படும் என்று PFRDA சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**எதில் மாற்றங்கள் செய்யப்படவில்லை?**

செப்டம்பர் 15, 2025 தேதியிட்ட தனது முந்தைய சுற்றறிக்கையில் உள்ள மற்ற அனைத்து விதிகளும் எந்த மாற்றமும் இன்றி தொடரும் என்று PFRDA தெளிவுபடுத்தியுள்ளது.

**NPS சந்தாதாரர்களுக்கு இது ஏன் முக்கியம்?**

எளிமையாகச் சொன்னால், இந்தக் தெளிவுபடுத்தல்கள் கட்டணங்கள் எவ்வாறு விதிக்கப்படுகின்றன என்பதில் சிறந்த வெளிப்படைத்தன்மையையும், சிறு மற்றும் செயலற்ற முதலீட்டாளர்களுக்கு நிவாரணத்தையும், ஒரே PRAN–இன் கீழ் உள்ள பல கணக்குகள் குறித்த தெளிவையும் தருகின்றன.

# பிள்ளைகளின் எதிர்காலம் சீராக இருக்க சில ஆன்மீக பரிகாரங்கள்!



பிள்ளைகளின் கல்வி, ஆரோக்கியம், நல்ல பழக்கம், மற்றும் வாழ்க்கை முன்னேற்றம் ஆகியவை பெற்றோரின் ஆசையும் பிரார்த்தனையும் சார்ந்தவை. கீழே சில எளிய, நம்பிக்கையுடன் செய்யக்கூடிய பரிகாரங்கள்:

**1. தினசரி பிரார்த்தனை & ஸ்லோகம்**

காலை, மாலை நேரங்களில் பிள்ளைகளுடன் சேர்ந்து விநாயகர் மற்றும் சரஸ்வதி ஸ்லோகங்களை சொல்லுங்கள்.

“ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் சரஸ்வத்யை நம:” என்ற மந்திரத்தை 11 முறை ஜபிக்கலாம்.

**2. ஆலய தரிசனம்**

வாரம் ஒரு நாள் பிள்ளைகளை விநாயகர் கோவில் அல்லது ஹயக்ரீவரின் சன்னதிக்கு அழைத்துச் செல்லுங்கள்.

கல்வி மற்றும் நல்ல அறிவு வேண்டி அங்கு நெய்விளக்கு ஏற்றலாம்.

**3. தானம் & நல்ல செயல்கள்**

பிள்ளைகளின் பெயரில் புத்தகங்கள், பென்சில், நோட்டுப் புத்தகம் போன்றவற்றை ஏழை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

இது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் நல்ல மனப்பாங்கிற்கும் உதவும்.

**4. வீட்டில் நல்ல சூழல்**

வீட்டில் சண்டை, கோபம், கடுமையான வார்த்தைகள் தவிர்க்கவும்.

பிள்ளைகளின் முன் நல்ல வார்த்தைகள், ஊக்கமளிக்கும் கதைகள் பேசுங்கள்.

**சிறு குறிப்பு:** பரிகாரம் என்பது நம்பிக்கையுடன், மன அமைதியுடன் செய்யப்படும் போது மட்டுமே பலன் தரும். பிள்ளைகளுக்கு அன்பும் ஆதரவும் கொடுப்பதே மிகப் பெரிய பரிகாரம்.

# இளங்கலை நீட் தேர்வு!

சென்னை, மே 02–

நாடு முழுவதும் இளங்கலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வு நாளை (மே 3) நடைபெறுகிறது. நாடு முழுவதும் 22 லட்சத்து 79 ஆயிரம் பேர் தேர்வெழுத உள்ள நிலையில், தேர்வு மைய இடங்களை மாணவர்கள் முன்கூட்டியே சரிபார்க்க தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது.

# கோடை விடுமுறை -சிறப்பு ரயில் சேவை நீடிப்பு!

சென்னை, மே.02–

கோடை விடுமுறையை முன்னிட்டு, திருச்சி – பெங்களூரு இடையே மே மாதத்தின் அனைத்து செவ்வாய்கிழமைகளிலும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. தென் மாவட்டங்களுக்கு செல்லும் பயணிகளுக்காக தாம்பரம் – தூத்துக்குடி இடையேயான சிறப்பு ரயில்களின் சேவை நீட்டிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பணி நிறைவு விழா!



மதுரை, மே 02–

எஸ். மாரியப்பன் என்ற உழைப்பாளி வாழியவே. எங்கள் குடும்பத்தினர் அனைவரது நன்மதிப்பைப் பெற்ற மிகச் சிறந்த மனிதர் இவர். 30.04.2026 இரவு இவரது பணி நிறைவு பாராட்டு விழா கே பி எஸ் மீனாட்சி ஹாலில் நடைபெற்றது.

கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் பாராட்டி சால்வை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கிப் பேசினார்.

மூத்த பத்திரிகையாளர் ப.திருமலை, வங்கி மேனாள் மேலாளர் ஜெயராமன், பால முரளி வாழ்த்துரை வழங்கினர். விழா நாயகர் எஸ். மாரியப்பன் நன்றி கூறினார்.

வருகை தந்த அனைவருக்கும் இரவு உணவு ஏற்பாடு செய்திருந்தனர். கெய் டிராவல்ஸ் என்று ஆரம்ப காலத்தில் இருந்து இன்று இந்தியா கேப்ஸ் என்ற பெயரில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் தினத்தந்தி மற்றும் மாலை மலர் நாளிதழ்களின் ஒரு அங்கம், இந்த நிறுவனத்தில் கடந்த 33 ஆண்டுகள் நம்பிக்கை நாணயம் திறமையான ஓட்டுநர் பணிவுடன் கூடிய பக்குவம்.

இப்படி ஏராளமான வாடிக்கையாளர்கள் நன்மதிப்பைப் பெற்றவர் நமது எஸ். மாரியப்பன். கடந்த முப்பதாண்டு காலமாக இவருடன் எங்கள் பயணம். எப்போதும் ஒரே மாதிரி இருக்கும் நல்லுள்ளம் இந்த மாரியப்பன். பொதுவாக இந்த நிறுவனத்தில் உள்ளவர்கள் அனைவரும் சிறந்தவர்கள்.

நமது மாரியப்பன் ஆகச் சிறந்தவர் என்பதில் இரு வேறு கருத்தில்லை.

இனி இவர் சுதந்திரப் பறவை. புதிதாக மாருதி சுசுகி எர்டிக்கா வாகனம் எடுத்துச் சொந்தமாக இயக்க உள்ளார் என்பதறிந்து அளவற்ற மகிழ்ச்சி. வளம் பெருகட்டும் நலம் நிலைக்கட்டும் வாடிக்கையாளர்கள் மகிழட்டும்.

# திடீரென மயங்கி விழுந்த உ.பி. காங்கிரஸ் தலைவர் - மருத்துவமனையில் அனுமதி!



லக்னோ, மே. 02–

உத்தரபிரதேச காங்கிரஸ் தலைவர் அஜய் ராய் (வயது 56). இவர் 5 முறை எம்.எல்.ஏ.வாக செயல்பட்டுள்ளார். இவர் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வாரணாசி தொகுதியில் பாஜக வேட்பாளராக களமிறங்கிய பிரதமர் மோடியை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

இந்நிலையில், அஜய் ராய்க்கு நேற்று திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. லக்னோவில் உள்ள வீட்டில் இருந்தபோது நேற்று மாலை 6 மணியளவில் அஜய் ராய் திடீரென மயங்கி விழுந்தார். இதனால் அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் அவரை மீட்டு உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மருத்துவமனையில் அஜய் ராய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது அவர் நலமுடன் உள்ளதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்!



திருச்செந்தூர், மே. 02–

அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். இங்குள்ள கடலில் புனித நீராடிவிட்டு சாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனிடையே, ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முன்தினம், மறுதினங்களில் காலையில் கடல் உள்வாங்குவதும், மாலையில் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திருச்செந்தூரில் இன்று காலை திடீரென கடல் உள்வாங்கியது. சுமார் 70 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியது. கடல் உள்வாங்கியுள்ள பகுதிகளில் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிகின்றன. கடல் உள்வாங்கியுள்ள நிலையில் பக்தர்கள் பாதுகாப்பாக கடலில் குளிக்கும்படி கோவில் நிர்வாகம், காவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் முற்றுகையால் ஈரானுக்கு ரூ.40,000 கோடி இழப்பு - பென்டகன்!

அமெரிக்கா, மே. 02–

ஏப்.13 முதல் ஈரானை கடல் வழியாக முற்றுகையிட்டுள்ள அமெரிக்க கடற்படையால் ஈரானில் 53 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் தேக்கம் ஆகியுள்ளது. அமெரிக்காவின் முற்றுகையால் ஈரானுக்கு ரூ.40,000 கோடி இழப்பு என பென்டகன் தெரிவித்துள்ளது.

# மத்தியப் பிரதேச படகு விபத்தில் 5 தமிழர்கள் உயிரிழந்த சோகம்!



மத்தியப் பிரதேசம், மே. 02–

மத்தியப் பிரதேசத்தில் சுற்றுலாப் படகு அணையில் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த 9 பேரில் 5 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சௌபாக்கியம், கார்குழலி, காமராஜ், மயூரான், தமிழ் வேந்தன் ஆகிய 5 பேர் உயிரிழந்ததால் சோகம். விபத்துக்கு முன் கடைசி நிமிடங்களில் லைஃப் ஜாக்கெட்கள் வழங்கப்படும் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# விரைவில் பெட்ரோல்-டீசல் விலை உயர்வு?



புதுடெல்லி, மே. 02–

விரைவில் பெட்ரோல், டீசல் விலையும் உயர்ந்தால் மக்களின் பாக்கெட் மணி வெகுவாக பதம் பார்க்கப்படும். பெட்ரோல், டீசல் விலை எவ்வளவு உயர்த்தப்பட்டாலும் உடனடியாக அதன் தாக்கம் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் மீதுதான் வந்து விழும். காய்கறி, பால் ஆகியவை கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு லாரிகள் மூலமாகவே கொண்டுவரப்படுகின்றன. எனவே பெட்ரோல் , டீசல் விலை உயரும் போது இவற்றை கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவு உயர்வதால் காய்கறிகள் மற்றும் பால் விலை உயரவாய்ப்பு உள்ளதாக பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

ஈரான் மீதான தாக்குதல் மற்றும் ஹார்மூஸ் ஜலசந்தி போக்குவரத்து முடக்கமே திடீர் விலை உயர்வுக்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

யஇதனிடையே சில தினங்களுக்கு முன், பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களில் விலை உயருகிறது என்று பரவி வரும் தகவலை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக இணைச் செயலாளர் சுஜாதா சர்மா திட்டவட்டமாக மறுத்தார். பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலையை உயர்த்தும் எந்த திட்டமும் தற்போது மத்திய அரசிடம் இல்லை. எனவே, தயவுசெய்து பீதி அடைய வேண்டாம். வதந்திகளை நம்ப வேண்டாம். சில பகுதிகளில் தேவையற்ற பதற்றத்தால் அதிக அளவில் எரிபொருள் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

நலம் நலமறிய..!
மருத்துவ குறிப்புகள்



## 50 வயதிற்கு பிறகும் ஆரோக்கியமா இருக்கனுமா.?



50 வயதைக் கடந்த பிறகு மனித உடலில் பல இயற்கையான மாற்றங்கள் நடைபெறத் தொடங்குகின்றன. இந்த மாற்றங்கள் உடல் வலிமை, மனநிலை மற்றும் தினசரி செயல்திறன் ஆகியவற்றை நேரடியாக பாதிக்கக்கூடியவை. தசை அளவு குறைதல், எலும்பு அடர்த்தி இழப்பு, ஹார்மோன் மாற்றங்கள், செரிமான மந்தம் மற்றும் தூக்கத் தர குறைவு போன்றவை இந்த வயதில் பொதுவாகக் காணப்படும் நிலைகளாகும். ஆனால் மருத்துவ நிபுணர்கள் கூறுவது என்னவென்றால், இந்த மாற்றங்களை முழுமையாகத் தடுக்க முடியாவிட்டாலும், சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் அவற்றின் தாக்கத்தை பெரிதும் குறைக்க முடியும்.

பலர் 50 வயதிற்கு பிறகு "இனி என்ன மிச்சம் இருக்கிறது" என்ற மனநிலைக்கு செல்லும் நிலையில், உண்மையில் இந்த கட்டமே வாழ்க்கையின் மிக முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்த வயதில் உடல்நலத்தைப் பாதுகாக்கும் பழக்கங்களை உருவாக்கினால், மீதமுள்ள வாழ்க்கை தரம் முழுமையாக மாறக்கூடியது. குறிப்பாக காலை நேரத்தில் செய்யப்படும் சில எளிய பழக்கங்கள் உடலின் நாளாந்த செயல்பாட்டை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.

காலையில் வெந்நீர் குடிப்பது முக்கியம்: தூக்கத்திற்குப் பிறகு உடல் இயல்பாகவே நீரிழப்பை சந்திக்கிறது. ஆனால் பலர் அந்த நேரத்தில் நேரடியாக தேநீர் அல்லது காபி குடிப்பதை வழக்கமாக வைத்துள்ளனர். இது உடலுக்கு உடனடி புத்துணர்ச்சி தருவது போல தோன்றினாலும், நீண்ட காலத்தில் செரிமான மண்டலத்தை சுமைபடுத்தி, இரத்த சர்க்கரையில் திடீர் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தலாம். அதற்கு பதிலாக வெந்நீர் குடிப்பது உடலின் செரிமான செயல்பாட்டை மெதுவாகத் தூண்டி, குடல் இயக்கத்தை சீராக்கி, உடலை இயற்கையாக செயல்படத் தயாராக்குகிறது. இதனால் நாளின் ஆரம்பமே லேசான மற்றும் சுறுசுறுப்பானதாக மாறுகிறது.

வெந்தய நீர்: அதேபோல், இரவு முழுவதும் ஊறவைத்த வெந்தய விதைகளை காலையில் குடிப்பது ஒரு எளிய ஆனால் சக்திவாய்ந்த ஆரோக்கிய பழக்கமாகக் கருதப்படுகிறது. வெந்தயத்தில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து இரத்த சர்க்கரை அளவை மெதுவாக உயர்த்தி, திடீர் சரிவுகளைத் தடுக்கும். இது நீரிழிவு நோய் அபாயத்தை குறைக்கும் இயற்கை வழியாகவும் பார்க்கப்படுகிறது. குறிப்பாக 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரத்த சர்க்கரை கட்டுப்பாடு மிக முக்கியமானதாக இருப்பதால், இந்த பழக்கம் மிகுந்த பயனளிக்கிறது.

காலை சூரிய ஒளி அவசியம்: மற்றொரு முக்கியமான காரணம் சூரிய ஒளி. இந்தியா போன்ற வெயில் நிறைந்த நாடுகளில் வாழ்ந்தாலும், பலருக்கும் வைட்டமின் D குறைபாடு காணப்படுகிறது. வயது அதிகரிக்கும்போது உடல் வைட்டமின் D உருவாக்கும் திறன் குறைகிறது. இதனால் எலும்பு பலவீனம், தசை வலி, சோர்வு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தினமும் 15 முதல் 20 நிமிடங்கள் காலை சூரிய ஒளியில் இருப்பது இந்த குறைபாட்டை சரிசெய்ய உதவுகிறது. இது எலும்புகளை வலுப்படுத்துவதோடு, உடலின் இயற்கை உயிர்க்கடிகாரத்தையும் (circadian rhythm) சீராக்குகிறது.

புரதம் நிறைந்த காலை உணவு: உணவு பழக்கமும் இந்த வயதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. 50 வயதிற்குப் பிறகு பலர் காலை உணவை தவிர்க்கும் அல்லது வெறும் தேநீர் மற்றும் பிஸ்கட் போன்ற குறைந்த ஊட்டச்சத்து உணவுகளை மட்டுமே எடுத்துக்கொள்வது வழக்கமாக உள்ளது. ஆனால் இது உடலின் தசை வலிமையை மெதுவாக குறைக்கும். அதற்கு பதிலாக புரதம் நிறைந்த உணவுகளை காலை உணவாக எடுத்துக்கொள்வது அவசியமாகும். பனீர், பருப்பு, தயிர், கடலை மாவு சப்பாத்தி போன்ற உணவுகள் தசை வளர்ச்சிக்கும், உடல் ஆற்றலுக்கும் உதவுகின்றன. குறிப்பாக தினசரி 25 முதல் 30 கிராம் புரதம் உடலுக்கு தேவையான ஆதரவைக் கொடுக்கிறது.

தினசரி நடைப்பயிற்சி: இறுதியாக, நடைப்பயிற்சி இந்த வயதில் மிக எளிமையான ஆனால் மிக சக்திவாய்ந்த மருந்தாகக் கருதப்படுகிறது. காலை உணவுக்குப் பிறகு 10 முதல் 15 நிமிடங்கள் நடப்பது இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த உதவுகிறது. அதேபோல் மாலை நேர நடைப்பயிற்சி மூட்டு இயக்கத்தை மேம்படுத்தி, இதய ஆரோக்கியத்தை பாதுகாக்கிறது. தொடர்ச்சியான நடைப்பயிற்சி மனநிலையை மேம்படுத்துவதோடு, உடலின் சுயநம்பிக்கையையும் உயர்த்துகிறது.

## வாக்கு எண்ணிக்கை; பெற்றோர்கள் உஷாராக இருக்க குழந்தைகள் ஆணையம் எச்சரிக்கை!



சென்னை, மே.02–

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் முன்னெப்போதையும் விட இளைஞர்கள், குழந்தைகள் ஆர்வமுடன் இருந்தனர். வாக்கு உ ரிமை இல்லாதபோதும் தேர்தல் குறித்து அறிந்துகொள்வதிலும், கட்சிகள், அதன் கொள்கைகள் குறித்தும் ஆர்வம் காட்டினர். இந்நிலையில் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதாவது மே 4 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் எதிர்பார்த்தபடி வரவில்லை என்றால் குழந்தைகள் தவறான முடிவெடுக்கும் மனநிலை உள்ளதால் பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தியுள்ளது.

## இந்தியாவில் குடியுரிமை விதிகள் 2026 மாற்றம்..!




புதுடெல்லி, மே. 02–

இந்தியாவில் குடியுரிமை விதிகளில் மாற்றங்கள், சிறு குழந்தைகளுக்கான விதிகள், ஒசிஐ (OCI) வைத்திருப்பவர்களுக்கான சிறப்புச் சலுகைகள் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இது குறித்து பார்க்கலாம்.

**மத்திய அரசு**

மத்திய அரசு குடியுரிமை விதிகளில் முக்கியமான மாற்றங்களை அறிவித்துள்ளது. 2009 ஆம் ஆண்டு இருந்த நாகரிகத்துக்கான விதிகளில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, புதியச் சட்ட திருத்த விதிகள் 2026 நடைமுறைக்கு வந்துள்ளன. இதன் மூலம் OCI (Overseas Citizen of India) தொடர்பான பல செயல்முறைகள் இப்போது முழுமையாக டிஜிட்டல் முறையில் மாற்றப்பட்டுள்ளன.

**இந்திய குடியுரிமை விதிகள் 2026**

இந்த புதிய விதிகளின் படி OCI கார்டுக்கு விண்ணப்பிப்பதும், அதை துறப்பதும் இனிமேல் ஆன்லைன் வழியாக மட்டுமே செய்ய முடியும். முன்பு இருந்த காகித ஆவண நடைமுறை நீக்கப்பட்டு, அனைத்தும் டிஜிட்டல் தளத்தில் எளிதாக செயல்படுமாறு மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் செயல்முறை வேகமாகவும் வெளிப்படையாகவும் இருக்கும் என அரசு தெரிவித்துள்ளது.அதேபோல் e–OCI என்ற புதிய டிஜிட்டல் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**OCI கார்டு விதிகளில் புதிய மாற்றம்**

இதன் மூலம் OCI கார்டு இனி மின்னணு வடிவத்திலும் கிடைக்கும். இதனால் பயனாளர்கள் கார்டை எப்போதும் ஆன்லைனில் அணுக முடியும்.சிறுவர்கள் தொடர்பான விதிகளிலும் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய விதிகளின் படி, எந்த ஒரு சிறுவனும் ஒரே நேரத்தில் இந்திய பாஸ்போர்டும் மற்றொரு நாட்டின் பாஸ்போர்டும் வைத்திருக்க முடியாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. இதன் நோக்கம் குடியுரிமை தொடர்பான குழப்பங்களை குறைத்து, சட்ட நடைமுறையை தெளிவாக்குவதாகும்.

**இனி ஆன்லைனில் மட்டுமே**

OCI கார்டை துறக்க விரும்பும் நபர்கள், தங்கள் கார்டை அருகிலுள்ள இந்திய தூதரகம் அல்லது FRRO அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் புதிய விதிகள் தெரிவிக்கின்றன. டிஜிட்டல் OCI என்றால் கூட, அதை முறையாக ரத்து செய்ய வேண்டும். மேலும், OCI அல்லது குடியுரிமை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டால், அதற்கு எதிராக மேல்முறையீடு செய்யும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. இது முடிவெடுக்கும் செயல்முறையில் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க உதவும்.

**மத்திய அரசு அறிவிப்பு**

OCI திட்டம் 2005 ஆம் ஆண்டு குடியுரிமை சட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.இது வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருக்கு இந்தியாவுடன் தொடர்பை வைத்திருக்க உதவுகிறது.

ஆனால் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் நாட்டினரைப் பொருத்தவரை இந்த திட்டத்திற்கு தகுதி இல்லை. மொத்தத்தில் இந்த புதிய மாற்றங்கள் மூலம் குடியுரிமை தொடர்பான செயல்முறைகள் மேலும் எளிமையாகவும், வேகமாகவும், டிஜிட்டல் முறையிலும் செயல்படும் வகையில் மாற்றப்பட்டுள்ளன.

## பி.எப். ஓய்வூதியத்தை ரூ.7,500 ஆக உயர்த்த பரிசீலனை!

புதுடெல்லி, மே. 02–

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி (இபிஎப்) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை கணிசமாக உயர்த்த மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

தற்போது ரூ.1,000 குறைந்தபட்ச ஓய்வூதியமாக உள்ளது. இத்தொகை ரூ.7,500 ஆக உயர்த்தப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து இறுதி முடிவு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றொரு முக்கிய மாற்றமாக, ஏடிஎம் வாயிலாக பிஎஃப் நிதியை திரும்பப் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் நிதியை இன்னும் எளிமையாகவும் விரைவாகவும் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## சினிமா துளிகள்..!

### கர்ப்பமாக இருப்பதை அறிவித்த ரெபா மோனிகா ஜான் !



அட்லி இயக்கத்தில் விஜய் நடித்த 'பிகில்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து அசத்தியவர், ரெபா மோனிகா ஜான் அதனைத் தொடர்ந்து 'தனுசு ராசி நேயர்களே', 'எப்.ஐ.ஆர்.', 'கூலி' படத்திலும் நடித்தார். விரைவில் திரைக்கு வரவிருக்கும் 'ஜனநாயகன்' படத்திலும் நடித்திருக்கிறார். தமிழ் தாண்டி மலையாளம், தெலுங்கிலும் படங்கள் நடித்துள்ளார்.

ரெபா மோனிகா ஜான், கடந்த 2022–ம் ஆண்டில் காதலர் ஜோமன் ஜோசப் என்பவரை திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்கு பின்னரும் படங்கள் நடித்து வந்தார்.

இந்த நிலையில், நடிகை ரெபா மோனிகா ஜான், தான் கர்ப்பமாக இருப்பதாக அறிவித்துள்ளார். கர்ப்பமாக இருக்கும் புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார். அவருக்கு திரையுலகினரும், ரசிகர்களும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

### அஜித்குமார் நடிக்கும் 'கிளாடியேட்டர்ஸ்' பர்ஸ்ட் லுக் வெளியீடு!




அஜித் குமார் தனது 55வது பிறந்தநாள் விழாவை மே. 1–ல் கொண்டாடினார். இதையொட்டி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளிக்கும் விதமாக, அவரது அடுத்த படத்துக்கான பர்ஸ்ட் லுக் வீடியோவை நேற்றிரவு வெளியிட்டார். தற்போது கார் ரேஸில் தீவிரமாக ஈடுபட்டு வரும் அவர், 'அஜித் குமார் ரேஸிங்' என்ற கார் பந்தய நிறுவனத்தை உருவாக்கி துபாய், பெல்ஜியம் உள்பட பல்வேறு நாடுகளில் நடந்த கார் பந்தயத்தில் பங்கேற்று பரிசுகள் வென்றார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அஜித் குமார் பங்கேற்று வரும் கார் பந்தயங்கள், அதில் செய்த சாதனைகள் போன்றவற்றை இயக்குனர் ஏ.எல்.விஜய் ஆவணப்படுத்தி வந்தார். தற்போது அதை முழுநீள திரைப்படமாக்கி, 'கிளாடியேட்டர்ஸ்' என்ற பெயரில் திரைக்கு கொண்டு வருகின்றனர். அஜித் குமார் ஸ்போர்ட்ஸ் சர்வீசஸ் எல்எல்சி வழங்க, ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைத்துள்ளார். இப்படத்தின் பர்ஸ்ட் லுக் வீடியோவில் அஜித் குமாரின் மோட்டார் ஸ்போர்ட்ஸ் பயணங்கள், அவர் எதிர்கொண்ட சவால்கள் குறித்து இடம்பெற்றுள்ளன. கடந்த ஆண்டு டிசம்பரில் டீசர் வெளியாகி இருந்தது.

## மீண்டும் விலை உயர்ந்த தங்கம், வெள்ளி!



சென்னை, மே. 02–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்து ரூ.1,12,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.14,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.270–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## கீழக்கரையில் எஸ்டிபிஐ கட்சியின் 17-வது ஆண்டு நீர்மோர் வழங்கும் நிகழ்வு!

ராமநாதபுரம், மே. 02–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் எஸ்டிபிஐ (SDPI) கட்சியின் நகர் சார்பாக கோடைக் காலத்தை முன்னிட்டு 17வது ஆண்டாக நீர்மோர் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.



இந்நிகழ்வில் கட்சியின் மாநிலத் துணைத் தலைவர் அப்துல் ஹமீத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி பழங்களை வழங்கினார். கடும் கோடை வெப்பத்தால் அவதிப்படும் மக்களுக்கு இந்நிகழ்வு நிவாரணமாக அமைந்தது. நிகழ்ச்சியில் நகர் நிர்வாகிகள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். மேலும், பொதுமக்கள் திரளாக பங்கேற்று மோர் அருந்தி சென்றனர்.

## பழனியில் சித்ரா பவுர்ணமியையொட்டி பால்குட ஊர்வலம்!

பழனி, மே. 02–

பழனியில் சித்ரா பவுர்ணமியையொட்டி முருகப்பெருமானுக்கு 108 பால்குடம் ஊர்வலம் நடைபெற்றது. இதை கந்த விலாஸ் அதிபர் என் செல்வகுமார் தொடங்கி வைத்தார்

பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் சித்ரா பவுர்ணமியையொட்டி திரு ஆவினன்குடி முருகப்பெருமானுக்கு 108 பால்குட ஊர்வலம். சிறப்பு பூஜைகளுடன் தொடங்கியது. இதை பழனி கந்த விலாஸ் அதிபர் என் செல்வகுமார் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் அறக்கட்டளை மற்றும் பழனி கோவில் செல்வ சுப்பிரமணிய குருக்கள் முன்னிலை வகித்தார். இதில் பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, பெரிய நாயகி கல்வி அறக்கட்டளை சுந்தரம், கோவில் சூப்பிரண்டு அழகர்சாமி, முன்னாள் கோவில் சூப்பிரண்டு முருகேசன், மணியம் சேகர், ரஞ்சித், உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர். பின்பு பால்குடம் ஊர்வலம் பெரிய நாயகி அம்மன் கோவிலில் இருந்து புறப்பட்டு, திருஆவினன்குடி கோயிலை சென்றடைந்தது. அங்கு முருகப்பெருமானுக்கு சித்ரா பவுர்ணமியையொட்டி 108 பால் குடங்களால் சிறப்பு பாலபிஷேகம் நடைபெற்று, பின்பு சிறப்பு பூஜைகள் வழிபாடு நடைபெற்றது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



பழனியில் சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, முருகப்பெருமானுக்கு பால்குட ஊர்வலம் நடைபெற்றது. இதில் கந்த விலாஸ் அதிபர் என் செல்வகுமார், கோவில் செல்வ சுப்பிரமணிய குருக்கள், கோவில் சூப்பிரெண்டு அழகர்சாமி, கட்டிட வல்லுனர் நேரு, அரிமா சுந்தரம், முன்னாள் கோவில் சூப்பிரண்டு முருகேசன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலை வாய்ப்பு
## டி.எம்.பி. வங்கியில் காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி லிமிடெட்

வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்

பதவிகளின் பெயர்கள்: செயலகப் பிரிவு, உலகளாவிய வெளிநாடு வாழ் இந்தியர் மையத் தலைவர் (GNC), துணைத் தலைமை நிதி அதிகாரி, சட்ட அதிகாரி, சிறப்பு அதிகாரி (தகவல் தொழில்நுட்பம்), கிளைத் தலைவர், கடன் பிரிவுகள் (சில்லறை சொத்துக்கள் பிரிவு, வர்த்தக நிதி பிரிவு, தயாரிப்பு நிபுணர் (வர்த்தக நிதி), மூத்த உறவு மேலாளர்) பதவிகள்

பணியிடங்கள்: இந்தியா முழுவதும்

தொடங்கும் தேதி: 29.04.2026

கடைசி தேதி: 19.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tmb.bank.in/careers

## வைகையில் கள்ளழகர் இறங்கிய போது பக்தர்கள் மீது காலணி வீசி அட்டூழியம்!



மதுரை, மே. 02–

மதுரை சித்திரைத் திருவிழாவில் நேற்று அதிகாலை வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கிய போது பக்தர்கள் மீது காலணிகள் வீசப்பட்டன. இதுபோன்று அநாகரிகமாக செயல்படுவோரை கைது செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் போலீசார் கண்காணிக்கத் தவறியதாக வேதனை தெரிவித்தனர்.

## '98.47 சதவீத ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன' - ரிசர்வ் வங்கி!

புதுடெல்லி, மே. 02–

புழக்கத்தில் இருந்த 2 ஆயிரம் நோட்டுகளில் இதுவரை 98.47 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.



கடந்த 2023ஆம் ஆண்டு மே 19ம் தேதி, 2000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதாக மத்திய அரசு அறிவித்தது. அறிவிக்கப்பட்டபோது, புழக்கத்தில் இருந்த ரூ.2000 நோட்டுகளின் மொத்த மதிப்பு ரூ.3.56 லட்சம் கோடியாக இருந்தது.

இந்நிலையில் ஏப்.30ம் தேதி நிலவரப்படி இந்த மதிப்பு ரூ.5,451 கோடியாக குறைந்துள்ளது. இந்த நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டாலும், அவை இன்னும் சட்டப்பூர்வமாகச் செல்லும் என்று ரிசர்வ் வங்கி தெளிவுபடுத்தியுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# மேற்கு வங்காளம்: 15 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு!



கொல்கத்தா, மே 02–
294 தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காள சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. முதற்கட்ட தேர்தல் கடந்த 23ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் கடந்த 29ம் தேதியும் நடைபெற்றது. தேர்தலில் 92.93 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

இதனிடையே, 2ம் கட்ட தேர்தலில் ஒருசில வாக்குச்சாவடிகளில் முறைகேடுகள் நடைபெற்றன. அதன்படி, திரிணாமுல் காங்கிரஸ் தேசிய பொதுச்செயலாளர் அபிஷேக் பானர்ஜியின் நெருங்கிய ஆதரவாளர் ஜஹாங்கீர்கான் தெற்கு 24 பர்கானஸ் மாவட்டம் டைமண்ட் ஹார்பர் தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதிக்கு உள்பட்ட பல்டா நகரில் உள்ள வாக்குச்சாவடியில் தேர்தலின்போது வாக்குப்பதிவு எந்திரத்தில் பாஜக வேட்பாளரின் பெயரில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. மேலும், பாஜக வேட்பாளருக்கு வாக்கு அளிக்க முடியாத வகையில் வாக்குப்பதிவு எந்திரத்தில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது. இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதையடுத்து, வாக்குச்சாவடியில் முறைகேடு நடைபெற்றதையடுத்து டைமண்ட் ஹார்பர் தொகுதியில் 4 வாக்குச்சாவடிகளிலும், மெக்ராஹட் பட்சிம் தொகுதியில் 11 வாக்குச்சாவடிகளிலும் தேர்தல் ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து இந்த 15 வாக்குச்சாவடிகளிலும் மறுதேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்நிலையில், மேற்கு வங்காளத்தில் வாக்குப்பதிவு ரத்து செய்யப்பட்ட 15 வாக்குச்சாவடிகளுக்கு இன்று மறுவாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 வரை நடைபெற உள்ளது. ஏற்கனவே முறைகேடு நடைபெற்ற நிலையில் 15 வாக்குச்சாவடிகளுக்கும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# விஜய் வருகை ரத்து: வேளாங்கண்ணியில் காத்திருந்த ரசிகர்கள் ஏமாற்றம்!





நாகப்பட்டினம், மே. 02–
தமிழக சட்டசபை தேர்தலில் நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் அனைத்து தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்டது. இந்த நிலையில் தேர்தலில் தங்கள் கட்சி வேட்பாளர்கள் மற்றும் தான் போட்டியிட்ட 2 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டி விஜய் ஆன்மிக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் தனது ஆன்மிக பயணத்தின் தொடர்ச்சியாக நாகை மாவட்டத்தில் உள்ள வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய மாதா பேராலயம், நாகூரில் உள்ள நாகூர் ஆண்டவர் தர்கா ஆகிய வழிபாட்டு தலங்களுக்கும் இன்று (சனிக்கிழமை) அவர் சென்று வழிபாடு நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தது. இதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சிக்கு வரும் அவர் பின்னர் அங்கிருந்து காரில் சாலை மார்க்கமாக வேளாங்கண்ணிக்கு வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

த.வெ.க. தலைவர் விஜய் வருகையையொட்டி வேளாங்கண்ணி பேராலயத்தில் த.வெ.க. தொண்டர்கள் குவிந்தனர். இன்று விஜய் வருவார் என அதிகாலை 3 மணி முதல் காத்திருந்த நிலையில், இதுவரை அவர் வராததால் ரசிகர்களும், த.வெ.க. தொண்டர்களும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

விஜய் அங்கு வராத நிலையில் டி.வி.கே., டி.வி.கே. என தொண்டர்கள் முழக்கமிட்டதால் திருப்பலி 30 நிமிடங்கள் தாமதமாக தொடங்கியது.

இதற்கிடையே, நாளை (ஞாயிற்றுக்கிழமை) பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் வாக்கு எண்ணிக்கை கண்காணிப்பு தொடர்பாக நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனை நடத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

# வாக்கு எண்ணிக்கை முடிவுகளை தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் - அறிவிப்பு வெளியீடு!




சென்னை, மே. 02–
தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்காளம், புதுச்சேரி மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களின் சட்டமன்ற தேர்தல்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி மே 4–ந்தேதி காலை 8 மணிக்கு தொடங்கப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டு, பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இந்த வாக்கு எண்ணிக்கையின் ஒவ்வொரு சுற்று முடிவுகளையும் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி, தேர்தல் ஆணையத்தின் results.eci.gov.in என்ற இணையதளத்திலும் 'ECINET' என்ற போன் செயலியிலும் வாக்கு எண்ணிக்கை முடிவுகளை தெரிந்துகொள்ளலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

# 9-ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி தீவிரம்!




புதுடெல்லி, மே. 02–
புதிய தேசிய கல்விக்கொள்கை அடிப்படையில் 9–ம் வகுப்புக்கு புதிய பாடப்புத்தகங்களை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) அறிமுகம் செய்துள்ளது. இந்த புதிய பாடப்புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பல இடங்களில் இருந்து புகார் எழுந்துள்ளது. எனவே இது தொடர்பாக என்.சி.இ.ஆர்.டி. அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 'புதிய கல்விக்கொள்கை அடிப்படையிலான 9–ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் போர்க்கால அடிப்படையில் அச்சிடப்பட்டு வருகின்றன. அத்துடன் நாடு முழுவதும் வினியோகிக்கப்பட்டும் வருகின்றன. மிக அதிக எண்ணிக்கையிலான பாடப்புத்தகங்கள் தேவைப்படுவதால், சில இடங்களில் அவற்றின் வினியோகத்துக்கும் தேவைக்கும் இடையே தற்காலிக இடைவெளி ஏற்பட்டுள்ளது' என கூறப்பட்டுள்ளது.

இந்த சூழலை என்.சி.இ.ஆர்.டி. உன்னிப்பாகக் கண்காணித்து, இந்த இடைவெளியைக் குறைக்கப் பணியாற்றி வருவதாகவும், பாடப்புத்தகங்களின் வினியோகம் சீரடைந்து வருவதாகவும் கூறியுள்ளது.

# கோடை விடுமுறை: சென்னை, மதுரை கிளை ஐகோர்ட்டுகளுக்கு அவசர வழக்கை விசாரிக்க நீதிபதிகள் நியமனம்!



சென்னை, மே. 02–
சென்னை ஐகோர்ட்டு மற்றும் மதுரை கிளைக்கு, நேற்று முதல் வருகிற 31–ம் தேதி வரை கோடை விடுமுறை ஆகும். இந்த காலத்தில், முதல் வாரத்தில் வருகிற 4, 5–ம் தேதிகளில் மனு தாக்கல் செய்யலாம். அந்த மனுக்களை வருகிற 6, 7–ம் தேதிகளில் விசாரணைக்கு எடுக்கப்படும்.

மே மாதத்தின் பிற வாரங்களில், திங்கட்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மனு தாக்கல் செய்யலாம். அந்த மனுக்கள் புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் கடைசி வாரத்தில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும்.

விடுமுறை காலத்தில் அவசர வழக்குகளை விசாரிக்க, சென்னை ஐகோர்ட்டிற்கும், மதுரை கிளை ஐகோர்ட்டிற்கும் நீதி பதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். எந்தெந்த தேதி களில் வழக்குகள் விசா ரணை நடைபெறுகிறதோ, அந்தந்த தேதிக்கு நீதிபதிகளை பட்டியலிட்டு தலைமை பதிவாளர் அல்லி அறிவித்துள்ளார்.

# யூடியூப் அறிவிப்பால் பயனர்கள் மகிழ்ச்சி!




புதுடெல்லி, மே. 01–
ஸ்மார்ட் போன்களில் தவிர்க்க முடியாத செயலிகளில் ஒன்றாக இருப்பது யூடியூப்தான். பிடித்த வீடியோக்கள், பாடல்கள் என சிறந்த பொழுதுபோகு தளமாக யூடியூப் உள்ளது. பலருக்கும் டிவி பார்க்கும் பழக்கமே குறைந்து போனதற்கு யூடியூப் தளம் ஒரு காரணம் என்றால் மிகையல்ல. அந்த அளவுக்கு ஸ்மார்ட் போன் பயனர்களிடம் பெரும் ஆதிக்கம் செலுத்தும் யூடியூப் அவ்வப்போது புதிய அப்டேட்களையும் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில், இனி Picture–in–Picture வசதியை ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் பயனர்கள் இலவசமாக பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இசை அல்லாத நீண்ட வீடியோக்களுக்கு மட்டுமே பயனர்கள் /இந்த வசதியை (PiP) இலவசமாக பயன்படுத்த முடியும். இதற்கு முன்பு பிரீமியம் கட்டணம் செலுத்தும் பயனர்களுக்கு இந்த வசதி இருந்தது

# 'நீட்' நுழைவுத் தேர்வு.. முக்கிய விதிமுறைகளை வெளியிட்ட தேசிய தேர்வு முகமை!



சென்னை, மே. 02–
மருத்துவப்படிப்புகளில் சேருவதற்கான 'நீட்' நுழைவுத் தேர்வு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகிறது. அதன்படி, 2026–27–ம் கல்வியாண்டுக்கான நீட் தேர்வு மே 3– ல் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

இந்த தேர்வை இதுவரை இல்லாத வகையில் 22.80 லட்சம் மாணவ–மாணவிகள் எழுத இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பிற்பகல் 2 மணி முதல் மாலை 5.20 மணி வரை அதாவது 3 மணி நேரம் 20 நிமிடம் தேர்வு நடைபெற இருக்கிறது. தமிழ் உள்ளிட்ட 13 மொழிகளில் இந்த தேர்வை எழுத முடியும்.

இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடப்பிரிவுகளில் இருந்து 180 கொள்குறி வகை வினாக்கள் கேட்கப்பட்டு ஒவ்வொரு வினாவுக்கு 4 மதிப்பெண் வீதம் 720 மதிப்பெண்ணுக்கு இந்த தேர்வு நடைபெறுகிறது. தவறான விடைக்கு ஒரு மதிப்பெண் கழிக்கப்படும்.

நீட் தேர்வுக்கு வரும் தேர்வர்கள் கடும் சோதனைக்கு பிறகே தேர்வறைக்கு உள்ளே அனுப்பப்படுவார்கள். அந்த வகையில் தேர்வை நடத்தக் கூடிய தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) தேர்வர்களுக்கான அறிவுரைகள் மற்றும் விதிமுறைகளை வெளியிட்டு இருக்கிறது. அதன்படி

* தேர்வர்கள் தண்ணீர் பாட்டில்கள் எடுத்து செல்லலாம். ஆனால் அவை வெளிப்படைத் தன்மையாக அதாவது ஒளிபுகும் தன்மையுடன் (டிரான்ஸ்பரன்ட்) இருக்க வேண்டும்.

* தேர்வர்கள் மத நம்பிக்கை சார்ந்த அடையாளங்களையோ, பொருட்களையோ அணிந்து வரலாம். ஆனால், முறையான சோதனைக்கு ஒத்துழைக்கும் வகையில், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே தேர்வு மையத்திற்கு வந்துவிட வேண்டும்.

* சாதாரண ஆடைகளை அணிவதே சரியானது என்றாலும், தேர்வர்கள் தங்களுக்கு தேவை என்று உணர்ந்தால், முழுக்கை ஆடைகளையோ அல்லது கம்பளியிலான ஆடைகளையோ அணிய அனுமதிக்கப்படுவார்கள். அவற்றை சோதனையிடுவதற்கும் தேர்வு மையத்துக்கு முன்கூட்டியே வரவேண்டும்.

* காலணிகளை பொறுத்தவரையில், சாதாரண செருப்புகள், குறைந்த உயரம் (லோ ஹீல்ஸ்) கொண்ட காலணிகளை அணியலாம்.

* கனமான அணிகலன்களை அணிவதை தவிர்க்கவேண்டும்.

* உயரமான காலணிகளை அணிவதை தவிர்க்க வேண்டும்.

* காலை 11 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை தேர்வு மையத்துக்குள் தேர்வர்கள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். 1.30 மணிக்கு மேல் யார் வந்தாலும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

* நீலம் அல்லது கருப்பு நிற பால்பாயிண்ட் பேனா பயன்படுத்தலாம். மாற்றுத்திறனாளி மாணவ – மாணவிகள் அதற்குரிய அடையாள அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும்.

* தேர்வின்போது கணக்கீடுகள் செய்வதற்கு அதற்கென்று வினாத்தாளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

* தேர்வு முடிந்த பிறகு ஓ.எம்.ஆர். விடைத்தாள்களை தேர்வறை கண்காணிப்பாளர் வசம் ஒப்படைத்த பிறகு தேர்வு அறையை விட்டு வெளியே வர வேண்டும்.

இதுபோன்ற பல்வேறு அறிவுரைகளை தேசிய தேர்வு முகமை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அறிவுறுத்தியுள்ளது. மேலும் தேர்வு மையம் இருக்கும் இடத்தை முன்கூட்டியே வந்தடையும் வகையில் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்திருக்கிறது.

# திருவண்ணாமலையில் விடிய விடிய கிரிவலம் சென்ற லட்சக்கணக்கான பக்தர்கள்!



திருவண்ணாமலை, மே. 02–
திருவண்ணாமலையில் மலையையே சிவனாக வழிபடுவதால் அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள 'அண்ணாமலை' என்று பக்தர்களால் அழைக்கப்படும் மலையை சுற்றி பவுர்ணமி நாட்களில் ஏராளமான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள். குறிப்பாக சித்ரா பவுர்ணமியன்று லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள்.

இந்த ஆண்டுக்கான சித்ரா பவுர்ணமி நேற்று முன்தினம் இரவு 9.52 மணியளவில் தொடங்கி நேற்று இரவு 11.08 மணிக்கு நிறைவடைந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் காலை முதல் ஏராளமான பக்தர்கள் திருவண்ணாமலைக்கு வந்தனர். காலையில் குறைந்த அளவிலான மக்களே கிரிவலம் சென்றனர்.

மாலையில் கிரிவலம் செல்லும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. இரவில் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். இதனால் நேற்று முன்தினம் இரவை போலவே நேற்று இரவும் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அலைமோதியது. இரவில் பக்தர்கள் கிரிவலம் செல்வதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து வந்தபடி இருந்தனர்.

முன்னதாக நேற்று கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் மதியம் சுமார் 12 மணி வரையில் குறையாமல் அதிகமாக காணப்பட்டது. 2–வது நாளான நேற்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் சென்றனர். பின்னர் வெயிலின் தாக்கத்தினால் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் மெல்ல, மெல்ல குறைய தொடங்கியது.

இருப்பினும் தொடர்ந்து பக்தர்கள் கிரிவலம் சென்ற வண்ணம் இருந்தனர். மீண்டும் மாலையில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகரித்தது. நேற்று இரவு 11.08 மணி வரையில் பவுர்ணமி இருந்ததால் நள்ளிரவு வரையில் கிரிவலம் செல்லும் பக்தர்களின் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. பக்தர்களுக்கு கிரிவலப்பாதையில் பல்வேறு இடங்களில் தண்ணீர், மோர், அன்னதானம் போன்றவை தொடர்ந்து வழங்கப்பட்டது.

சித்ரா பவுர்ணமி கிரிவலம் சென்று முடித்த பக்தர்கள், அருணாசலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்ய குவிந்தனர். இதனால் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு நேற்று ரூ.50 கட்டணம் தரிசனம் ரத்து செய்யப்பட்டதால் கோவிலில் பக்தர்கள் பொது தரிசனமாக ராஜகோபுரம் வழியாக செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று பகலில் வெயில் கொளுத்தியது. வெயிலையும் பொருட்படுத்தாமல் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய 5 மணி நேரத்திற்கு மேல் ஆனதாக தெரிவித்தனர். வரிசையில் வந்த பக்தர்களுக்கு கோவில் நிர்வாகம் சார்பில் குடிநீர், மோர், வாழைப்பழம், தர்பூசணி, வெள்ளரிக்காய், பிஸ்கெட், கடலை மிட்டாய் போன்றவை வழங்கப்பட்டது.

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு அருணாசலேஸ்வரர் கோவில் மற்றும் கிரிவலப்பாதையில் போக்குவரத்து, பொதுமக்கள் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். கோவில் முக்கிய பிரகாரங்கள், கிரிவலப்பாதையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

# தமிழகத்தில் 4-ம் தேதி முதல் கத்தரி வெயில்: கோடை மழைக்கு வாய்ப்பா? வானிலை ஆய்வாளர் தகவல்!



சென்னை, மே, 02–
தமிழ்நாட்டில் கோடை காலம் மார்ச் மாதம் தொடங்கி சுட்டெரித்து வருகிறது. நேற்று முன்தினம் வேலூரில் 108 டிகிரியை தாண்டி வெயில் பதிவாகியது. இதுபோல் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் 105 டிகிரியை கடந்தும், சில இடங்களில் 100 டிகிரியை தாண்டியும் வெப்பம் கோர முகத்தை காட்டி வருவதை பார்க்க முடிகிறது.

இதன் தொடர்ச்சியாக கோடை காலத்தின் உச்சம் என்று கூறப்படக் கூடிய அக்னி நட்சத்திரம் என அழைக்கப்படும் கத்தரி வெயில் காலம் வருகிற 4–ந்தேதி முதல் 28–ந்தேதி வரை நீடிக்கும். இந்த காலகட்டத்தில் வெப்பம் கோரத்தாண்டவம் ஆடும். பகலில் கொளுத்தும் வெயிலால் இரவில் கடும் உஷ்ணத்தை உணர முடியும். பகலில் 110 டிகிரி வரை கூட வெப்பத்தின் தாக்கம் பதிவாகும்.

அந்த வகையில் நாளை மறுதினம் (திங்கட்கிழமை) தொடங்க இருக்கும் கத்தரி வெயில் காலம் இந்த ஆண்டு எப்படி இருக்கும்? என்பது குறித்து தனியார் வானிலை ஆய்வாளர் டெல்டா வெதர்மேன் ஹேமச்சந்தர் விளக்கம் அளித்தார்.

முதல் 2 வாரங்கள் கடல் சார்ந்த அலைவுகள் இந்திய பெருங்கடல் பகுதிகளுக்கு வருகிறது. வெப்பமண்டல காற்று குவிதல் வடக்கு நோக்கி பயணிக்க இருக்கிறது. இதனால் இந்த ஆண்டு கத்தரி வெயில் காலம் வெப்பமும், கோடை மழையும் கலந்த கலவையாகவே இருக்கும். கோடை மழை இயல்பைவிட அதிகமாகவே பதிவாகும்.

இதுமட்டுமல்லாமல், தென்மேற்கு பருவமழை நடப்பாண்டில் முன்கூட்டியே வருகிற 23–ந்தேதி முதல் 25–ந்தேதிக்குள் கேரளம் மற்றும் அதனையொட்டிய கர்நாடகா, தெற்கு ஆந்திராவில் தொடங்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. பருவமழைக்கு முந்தைய மழைப்பொழிவும் கோடை காலத்தில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது பருவக்காற்றை கொண்டு வரக்கூடிய காற்று சுழற்சி, காற்றழுத்த தாழ்வுப் பகுதி. புயல் போன்ற அமைப்புகள் உருவாகி மழையை கொடுக்கும்.

அதாவது, இம்மாதத்தின் முதல் வாரத்தில் மேற்கு, உள்மாவட்டங்களில் மழையும், 2 மற்றும் 3–வது வாரத்தில் தமிழ்நாட்டில் பரவலாக மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. அதுவும் இடி மின்னலுடன் கூடிய மழையாகவே இருக்கும். அதிலும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 4–வது வாரத்தில் பருவமழை தொடங்கிய பிறகு தமிழ் நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையையொட்டிய பகுதிகளில் மழை பெய்யக் கூடும்.

ஆக கத்தரி வெயில் காலத்தில் கோடை மழை என்ற சாதகமான சூழலே தற்போதுவரை இருக்கிறது. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களுடன் மே மாத கணிப்பை ஒப்பிடுகையில் வெப்பம் காணப்பட்டாலும், கோடை மழை அதிகம் பதிவாகும் என்றே தெரிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020